PRINCIPAL SUBORDINATE JUDGES COURT, MAYILADUTHURAI
RECEIVED
29 JUN 2026
SHERISTADAR

<u>முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை</u>

<u>முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,</u>

<u>முதன்மை சார்பு நீதிபதி.</u>

<u>MCOP No.193/2024</u>

ம.சா. 2 தேதி. 29.06.2026

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சுப்ரமணியன் | த/பெ, | எல்லப்பன் |
| வயது | 57 | தொழில் | விவசாயம் |
| கிராமம் | திருவிளந்தை | தாலுக்கா | தரங்கம்பாடி |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை

நான் இந்த மனுவில் மனுதாரர் தரப்பு 2ம் சாட்சி ஆவேன். எனது முதல் விசாரணை சங்கதிகளை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் உள்ள சங்கதிகள் நான் சொல்லி தான் தட்டச்சு செய்யப்பட்டது.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

நானும் மனுதாரர்களும் ஒரே ஊரைச்சேர்ந்தர்வர்கள் என்றால் சரிதான், சுமார் 20 ஆண்டுகளாக அவர்களை எனக்கு நன்கு தெரியும். மனுதாரர் தரப்பில் சாட்சியம் அளிக்க என்னை அழைத்தன்பேரில் நான் சாட்சியம் சொல்ல வந்துள்ளேன். சாட்சியம் சொல்ல நீதிமன்றத்திலிருந்து எனக்கு எந்த சம்மனும் வரவில்லை. பொறையார் காவல் நிலையம் இந்த வழக்கு சம்பந்தமாக தரங்கம்பாடி, குற்றவியல் நீதித்துறை நீதிமன்றத்தில் அழைப்பாணை அனுப்பப்பட்டு ஏதேனும் சாட்சியம் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. இந்த வழக்கு சம்பந்தப்பட்ட பொறையார் காவல் நிலைய இறுதி அறிக்கையின் சாட்சி பட்டியலில் சாட்சியாக எனது பெயர் இல்லை என்றால் சரிதான். விபத்து சம்பந்தமாக நான் காவல் நிலையத்திற்கு புகார் கொடுக்கவில்லை. நான் இந்த சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றாலும் மனுதாரர்கள் எங்கள் ஊர் என்பதால் அவர்களை முன்பே அறிமுகம் ஆனவர்கள் என்பதால் அவர்களுக்கு ஏதேனும் ஆதாயம் கிடைக்க வேண்டும் என்ற நோக்கோடு சம்பவம் பற்றி கூறுகிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்லுவது போல் இந்த விபத்தில் முழுமையாக விசாரணை செய்து அந்த வாகனத்தை ஓட்டி வந்த விக்னேஷ் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிச்சென்று இந்த விபத்தினை ஏற்படுத்திக்கொண்டார் என்று இறுதி அறிக்கையில் கூறியுள்ளனர் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது.

சுப்ரமணியன்

நான் எனது முதல் விசாரணையில் இறந்துபோன நபர் விக்னேஷ் சாதாரணமாக இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்தார் என்று நான் கூறியுள்ளது தவறு என்றால் சரியல்ல,

E.சுப்ரமணியன்

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.